www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**6 - STD**

# மூன்றாம் பருவ நிறைவுத் தேர்வு - 2024

## சமூக அறிவியல்

பதிவு எண்.

நேரம்: 2.00 மணி மதிப்பெண்கள்: 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** 8 x 1 = 8

1. பாண்டியர் ஆட்சிக்குப் பின் ஆட்சிக்கு வந்தோர் _____ ஆவார்
   அ) சாதவாகனர்கள் ஆ) சோழர்கள் இ) களப்பிரர்கள் ஈ) பல்லவர்கள்
2. கடைசி மௌரிய அரசரைக் கொன்றவர்
   அ) புஷ்யமித்ரர் ஆ) அக்னிமித்ரர் இ) வாசுதேவர் ஈ) நாராயணர்
3. அறுவைச் சிகிச்சைச் செயல்முறை குறித்து விளக்கிய முதல் இந்தியர் _____
   அ) சரகர் ஆ) சுஸ்ருதர் இ) தந்வந்திரி ஈ)அக்னிவாசர்
4. பொருந்தாத இணையைக் கண்டறிக.
   அ) மெஸடா - ஸ்பெயின்
   ஆ) ஜுரா - பிரான்ஸ்
   இ) பென்னைன்ஸ் - இத்தாலி
   ஈ) கருங்காடுகள் - ஜெர்மனி
5. புவியின் வடிவம்
   அ) சதுரம் ஆ) செவ்வகம் இ) ஜியாய்டு ஈ) வட்டம்
6. பாறைகள், பாறைச் சிதைவுகள் மண் போன்ற பொருள்கள் சரிவை நோக்கி மொத்தமாக கீழே நகர்வது _______ எனப்படும்.
   அ) வெள்ளம் ஆ) சூறாவளி இ) நிலச்சரிவு ஈ) பனிச்சரிவு
7. மக்களாட்சியின் பிறப்பிடம்
   அ) சீனா ஆ) அமெரிக்கா இ) கிரேக்கம் ஈ) ரோம்
8. மாநகராட்சியின் தலைவர் ______ என அழைக்கப்படுகிறார்.
   அ) மேயர் ஆ) கமிசனர் இ) செயலர் ஈ) தலைவர்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக** 8 x 1 = 8

9. சங்க காலத்து மிகப்பழமையான தமிழ் இலக்கண நூல் ______
10. குஷாணர்களின் பிந்தைய தலைநகரம் _____ ஆகும்.
11. _____ ஹர்ஷவர்தனரை நர்மதை ஆற்றின் கரையில் தோற்கடித்தார்.
12. உலகின் மிக அதிக மழைப்பெறும் இடம் _______
13. முதன்மை தீர்க்கக்கோடு ______ என அழைக்கப்படுகிறது.
14. _______ அரசாங்கத்தின் முக்கிய வருவாயாக இருந்தது.
15. நம் நாட்டில் ______ மக்களாட்சி செயல்படுகிறது.
16. இந்தியாவிலேயே பேரூராட்சி என்ற அமைப்பை அறிமுகப்படுத்திய மாநிலம் ______ ஆகும்.

**III. பொருத்துக.** 4 x 1 = 4

17. அதியமான் - 10,000 மாணவர்கள்
18. நாளந்தா பல்கலைக்கழகம் - துருவம்
19. கங்கை நதி - வேளிர்
20. $90^{o}$ அட்சக்கோடு - இமயமலை

**IV. ஏதேனும் 6 வினாவிற்கு சுருக்கமாக விடையளி** 6 x 2 = 12

21. பண்டைக்காலத் தமிழகத்தின் வரலாற்றை மறுகட்டுமானம் செய்ய உதவும் இரு இலக்கியச் சான்றுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
22. காளிதாசரின் "மாளவிகாக்னிமித்ரம்" குறித்து சிறு குறிப்பு வரைக.



CamScanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

23. குப்தர்கள் காத்தில் நிலங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டன.
24. தக்கோலம் போர் பற்றிக் குறிப்பெழுதுக.
25. "மான்சூன் காலநிலை" பற்றி சுருக்கமாக எழுதுக.
26. தலநேரம் என்பது என்ன?
27. பேரிடர் - விளக்குக.
28. வேறுபடுத்துக : 1. மலையிடைப் பீடபூமி மற்றும் தெற்கு பீடபூமி
29. மக்களாட்சி என்றால் என்ன?
30. கிராம ஊராட்சியின் வருவாய்களைப் பட்டியலிடுக.

**V. ஏதேனும் 4 வினாவிற்கு விரிவான விடையளி** **4 x 5 = 20**

31. மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் இந்தியாவின் மீது படையெடுத்தவர் யார்?
32. கட்டடக்கலைக்கு பல்லவர்கள் ஆற்றிய பங்களிப்பைத் திறனாய்வு செய்க.
33. புவி மாதிரியின் பயன்கள் யாவை?
34. வெள்ளம் என்றால் என்ன? வெள்ளத்தின் போது செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை எவை?
35. நேரடி மக்களாட்சி, பிரதிநிதித்துவ மக்களாட்சி - ஒப்பீடு செய்து வேறுபாடுகளை அறியவும்.
36. சாலை பாதுகாப்பு குறித்த முழக்கங்களை எழுதுக.

**VI. உலக வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்** **8 x 1 = 8**

37. 1) பசிபிக் பெருங்கடல்
2) வட அமெரிக்கா
3) ஆப்பிரிக்கா
4) ஆசியா
5) இந்தியப்பெருங்கடல்
6) அரபிக்கடல்
7) தென் பெருங்கடல்
8) நிலநடுக்கோடு



www.Padasalai.Net

CamScanner

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com